

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முதலமைச்சரின் செயலாளர் முனைவர் எம்.எஸ். சண்முகம், அவர்களின் தாயார் திருமதி எம்.எஸ். ராஜலட்சுமி அவர்கள் நேற்று முன்தினம் (8.7.2025) உடல்நலக் குறைவால் காலமானதையொட்டி அன்னாரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா சுப்பிரமணியன் உள்ளார்.

# தொழில் தொடங்க உகந்த மாநிலங்கள் பட்டியலில் தமிழ்நாடு முதலிடம்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதம்!

சென்னை, ஜூலை 10-

தொழில் தொடங்க உகந்த மாநிலங்கள் பட்டியலில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளதாக தொழிற்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதம் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் கூறியதாவது, தி எகனாமிஸ்ட் இன்டலிஜென்ஸ் யூனிட் அதன் 2025-2029 மாநில வாரியான வணிக சுற்றுச்சூழல் தரவரிசையை வெளியிட்டுள்ளது. இங்கு வணிக நட்பு சூழல், தொலைநோக்கு தலைமை, பயனுள்ள கொள்கை மற்றும் இடைவிடாத செயல்படுத்தல் ஆகியவை ஒன்றிணைந்துள்ளது.

உலகளாவிய ஆட்டோ ஜாம்பவான்கள் முதல் மின்சார வாகன நிறுவனங்கள் வரை, பொறியியல் ஜாம்பவான்கள் முதல் மின்னணு நிறுவனங்கள் வரை,உலகளவில் பல்வேறு தொழில் முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டை தேர்வு செய்கின்றனர். ஏனெனில் இங்கு வெற்றி பெறுவது எளிது மற்றும் எளிதானது.

திராவிட மாடல் ஆட்சியில் தொழில்துறையில் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. தமிழ்நாட்டின் வரலாற்றில் இதற்கு முன் ஒரு போதும் எங்கள் HCM இன் தலைமையில் இந்த பருவத்தில் இதுபோன்ற தொடர்ச்சியான உலகளாவிய பாராட்டைப் பெற்றதில்லை, உலகம் முழுவதும் தமிழ்நாட்டை பிராண்ட் ஆக காண்பிப்பதில் செய்த பணி குறித்து நான் மிகவும் பெருமைப் படுகிறேன்.

கடந்த ஆட்சியில் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டில் தொழில் தொடங்க பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. குஜராத், மராட்டியம் மாநிலங்கள் பட்டியலில் 2 மற்றும் 3வது இடத்தில் உள்ளன.

### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அழைப்பு!

இந்தியாவில் தொழில் தொடங்க சாதகமான சூழல் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பது, திராவிட மாடல் ஆட்சியின் சாதனைக்கான மற்றொரு நிரூபணம் என அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்துள்ளார்.

தொழில் தொடங்க ஏதுவான நிலையை உருவாக்கியது, தொலைநோக்கு பார்வை கொண்ட தலைமைப் பண்பு, அனைவருக்குமான கொள்கை மற்றும் இடைவிடாத உழைப்பு ஆகியவை இணைந்த திராவிட மாடல் அரசின் நடவடிக்கைக்கு கிடைத்த வெற்றி என்று அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச வாகன நிறுவனங்கள் முதல் மின்சார வாகன நிறுவனங்கள் வரை, பொறியியல் பெரு நிறுவனங்கள் முதல் மின்னணு நிறுவனங்கள் வரை என உலகம் முழுவதும் உள்ள நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வந்துள்ளனர். இங்கு அவர்களுக்கு தேவையான வெற்றி கிடைக்கிறது என்றும் தெரிவித்துள்ள டி.ஆர்.பி.ராஜா, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான ஆட்சியில் பல்வேறு சாதனைகளை படைக்கும் அரசுக்கு உலகளவில் பாராட்டுகள் தொடர்ந்து கிடைத்து வருகிறது என்றும் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

உலக முதலீட்டாளர்கள் அனைவரும் தமிழ்நாடு வருகை தந்து, தமிழ்நாடு உடன் வளருங்கள் என்றும் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அழைப்பு விடுத்துள்ளார்.



வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் தனியார் பள்ளி வாகனம் மீது இரயில் மோதிய விபத்தில் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களை நேற்று முன்தினம் (08.07.2025) நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா, துணை மேயர் பா.தாமரைச்செல்வன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.ஜெயக்குமார், உட்பட பலர் உள்ளனர்.

## கடலூர் மாவட்டம்: தனியார் பள்ளி வாகனம் இரயில் மோதி விபத்து!

# உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி ரூ.10 லட்சம்!

## அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்– சி.வெ.கணேசன் வழங்கினர்!

கடலூர், ஜூலை 10-

வேளாண்மை உழவர் நலத்துறை எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் தனியார் பள்ளி வாகனம் மீது இரயில் மோதிய விபத்தில் உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் மூலம் ரூ.10 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினர்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ. ஐயப்பன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் தனியார் பள்ளி வாகனம் மீது இரயில் மோதிய விபத்தில் பாதிக்கப்பட்டுசிகிச்சைபெற்றுவருபவர்களுக்கு நேற்று முன்தினம் (08.07.2025) நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர்.

தொடர்ந்து, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் விபத்தில் உயிரிழந்த சுப்பிரமணியபுரத்தினை சேர்ந்த மாணவி சாருமதி, மாணவன் செழியன் ஆகியோர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவர்களது உடலுக்கு மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தியதோடு, முதலமைச்ச ரின் பொது நிவாரண நிதியின் மூலம் 2 குழந்தை களுக்கும் தலா ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கி பெற்றோர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார்.

அமைச்சர் பெருமக்கள் தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் (08.07.2025) காலையில் தனியார் பள்ளி வாகனம் நிமிலேஷ், தொண்டமாநத்தம் (வயது 12), சாருமதி, சுப்பரமணி புரம் (வயது 16), செழியன், சுப்பரமணிபுரம் (வயது 15), விஷ்வேஷ், தொண்டமாநத்தம் (வயது 16) ஆகிய நான்கு மாணவர்களை ஏற்றிக்கொண்டு செம்மங்குப்பம் இரயில்வே கேட்டை கடக்கும் போது இரயில் மோதி ஏற்பட்ட விபத்தின் காரணமாக மாணவன் நிமிலேஷ் மற்றும் மாணவி சாருமதி ஆகிய இரண்டு மாணவர்களும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

மேலும், விபத்தில் காயமடைந்து கடலூர் அரசு மருத்துவமனையில் செழியன், விஷ்வேஷ் ஆகிய மாணவர்கள், வாகன ஓட்டுநர் சங்கர் மற்றும் விபத்து நடந்த இடத்திற்கு உதவிட வந்தபோது அறுந்து விழுந்த மின்கம்பியிலிருந்து மின்சாரம் தாக்கி பாதிப்படைந்த அண்ணாதுரை ஆகிய நபர்களுக்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டது. மேல்சிகிச்சைக்காக ஜிப்மர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட மாணவன் செழியன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இத்துயர சம்பவத்தினை அறிந்த முதலமைச் சர் அவர்கள் முதலமைச்ச ரின் பொது நிவாரண நிதியிலிருந்து இந்த விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோர்களுக்கு தலா ரூ.5 இலட்சம் வழங்கிடவும், பலத்த காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ரூ.1 இலட்சம், இலேசான காயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.50,000 வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதுபோன்ற இரயில் விபத்துகளை தவிர்த்திட இரயில்வே துறையின் கட்டுபாட்டில் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட வேண்டும். இரயில்வே துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாநில மொழியான தமிழ் தெரியாததால், பொது மக்களுக்கு தகவல் தெரிவிப்பதில் மிகுந்த சிரமம் ஏற்படுவதால் தமிழ் தெரிந்த பணியாளர்களை பணியமர்த்திட வேண்டும்.

அனைவரும் வருந்ததக்க மிகவும் துயரமான கோரவிபத்து இன்றைய தினம் ஏற்பட்டுள்ளது. குழந்தைகளை நல்ல முறையில் கல்வி கற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற கனவுகளோடு பள்ளி வாகனத்தில் பெற்றோர்கள் அனுப்பி வைத்துள்ளனர். அனைவரும் துன்பப்படும், கவலைப்படும் நிகழ்வு ஏற்பட்டுள்ளது. எனவே ஒருவரை ஒருவர் குறை கூறாமல் இதுபோன்று இனிவரும் காலங்களில் நிகழாமல் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருபவர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகளை வழங்கி விரைவில் வீடு திரும்பும் வண்ணம் சிகிச்சை நல்ல முறையில் அளிக்க மருத்துவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், இதுபோன்று வாகன விபத்துகள் மீண்டும் ஏற்படாவண்ணம் தடுத்திடும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக அரசின் வழிகாட்டுதலின்படி மாவட்ட நிருவாகத்தின்சார்பில்விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் பெருமக்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா, துணை மேயர் பா.தாமரைச் செல்வன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ். ஜெயக்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் உள்ளனர்.

## ‘ஹஜ்’ பயணம் மேற்கொள்ள விரும்பும்

# முஸ்லிம் பெருமக்களிடமிருந்து விண்ணப்பங்கள்!

## சிறுபான்மையினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 10-

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஹஜ் 2026-ல் ஹஜ் பயணம் மேற்கொள்ள விரும்பும் தமிழ்நாட்டைச் சேர்ந்த முஸ்லிம் பெருமக்களிடமிருந்து, மும்பையிலுள்ள இந்திய ஹஜ் குழுவானது ஹஜ் விண்ணப்பங்களைப் பெற தொடங்கியுள்ளது என்பதை தமிழ் நாடு மாநில ஹஜ் குழு அறிவிக்க விரும்புகிறது.

இந்திய ஹஜ் குழு மூலம் ஹஜ் 2026-ற்காக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் 07.07.2025 முதல் 31.07.2025 (இரவு 11.59 வரை) முடிய ஆன்லைன் விண்ணப்பத்தை இந்திய ஹஜ் குழு இணையதளம் மூலம் அதாவது HTTPS//HAJCOMMITTEE.GOV.IN என்ற இணையம் வழியாக (அல்லது) ஐபோன் (அல்லது) ஆண்ட்ராய்டு கைபேசியில் “HAJ SUVIDHA” செயலியினை பதிவிறக்கம் செய்வதன் மூலம் பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம்.

ஹஜ் 2026-ல் விண்ணப்பதாரர்கள் ஹஜ் விண்ணப்பப் படிவத்தை கட்டணம் ஏதுமின்றி சமர்ப்பிக்கலாம். இயந்திரம் மூலம் படிக்கத்தக்க பாஸ்போர்ட்டின் முதல் மற்றும் கடைசி பக்கம், வெள்ளைநிற பின்னணியுடன் கூடிய சமீபத்திய பாஸ்போர்ட் அளவு புகைப் படம், உறைத் தலைவரின் இரத்து செய்யப்பட்ட காசோலை நகல் அல்லது சேமிப்பு வங்கிக் கணக்கு புத்தக நகல் மற்றும் முகவரிச் சான்றின் நகல் ஆகியவற்றை பதிவேற்றம் செய்ய வேண்டும். கடந்த ஆண்டைப் போலவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஹஜ் பயணிகள் தங்கள் விருப்பத்தின் வரிசை அடிப்படையில் இரண்டு புறப்பாட்டு தளங்களை தேர்ந்தெடுக்கலாம்.

வாழ்நாளில் ஒருமுறை மட்டும் இந்திய ஹஜ் குழு மூலமாக ஹஜ் பயணத்தை மேற்கொள்ளலாம் என்னும் விதிமுறையை இந்திய ஹஜ் குழு செயற்படுத்தி வருகிறது. குறைந்தபட்சம் 31-12-2026 வரையில் செல்லக்கூடிய இயந்திரம் மூலமாக படிக்கத் தக்க பன்னாட்டு பாஸ்போர்ட்டை விண்ணப்பதாரர்கள் வைத்திருக்க வேண்டும்.

ஹஜ் 2026-ற்கான வழிமுறைகளை இந்திய ஹஜ் குழுவின் இணையதள முகவரி HTTPS://HAJCOMMITTEE.GOV.IN மூலம் தெரிந்து கொள்ளலாம். 2025-ஆம் ஆண்டு ஹஜ் பயணத்திற்கான “நுசுக் மசார்” போர்ட்டலின்படி பாஸ்கோர்ட்டுக்காக புதிதாக விண்ணப்பிப்பவர்கள் குடும்ப பெயர்/ கடைசி பெயர் ஆகியவற்றை காலியாக விடாமல் கண்டிப்பாக பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்கிற நிபந்தனை உள்ளது.

மேலும், ஹஜ் 2026-ல் புனித ஹஜ் பயணம் மேற்கொள்ள தேர்ந்தெடுக்கப்படும் புனிதப் பயணிகள் நபர் ஒருவருக்கு முதல் தவணைத் தொகையாக ரூ.1.50 இலட்சத்தை செலுத்த தயார் நிலையில் இருப்பதுடன் தங்களிடம் செல்லத்தக்க பாஸ்போர்ட் உள்ளதை உறுதி செய்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஆன்லைன் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை விண்ணப்பதாரர்கள் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி 31.7.2025 ஆகும். மேலும் ஹஜ் பயணிகள் மரணம் அல்லது கடுமையான மருத்துவ நோய் தவிர வேறு காரணத்திற்காக பயணத்தை இரத்து செய்ய நேரிட்டால் அபராதம் விதிக்கப்படும்.

இதனால் விண்ணப்பதாரர்களுக்கு நிதி இழப்பு ஏற்படக்கூடும். எனவே ஹாஜிகள் தங்கள் தயார் நிலை மற்றும் ஹஜ் பயணத்தை மேற்கொள்வதற்கான உறுதிப்பாட்டை கவனமாக பரிசீலித்த பின்னரே விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.



மயிலாடுதுறைமாவட்டம் செம்பனார்கோயில் மத்திய ஒன்றியம் திருக்கடையூரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 102 வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சார கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில்மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா முருகன் எம்.எல்.ஏ., உடன் தலைமை கழக பேச்சாளர்கள் நாகை நாகராஜன், அருள்தாஸ், இளம் பேச்சாளர் குமரவேல், மாவட்ட துணை செயலாளர் மு. ஞானவேலன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம்.ஸ்ரீதர் செம்பனார்கோயில் மத்திய ஒன்றிய கழக செயலாளர் அமிர்த.விஜயகுமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.கே.மருது மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி திருவரங்குளம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட காயம்பட்டி ஊராட்சி கல்லுப்பள்ளத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர், கனிம வளத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பின் மூலம் கழக அரசின் சாதனை திட்டங்களை மக்களிடையே வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் மேற்கொண்டு, ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் மொத்த வாக்காளர்களில் 30 சதவீதத்திற்கு மேற்பட்ட வாக்காளர்களை தி.மு.க.வின் உறுப்பினராக சேர்க்கும் பணியினை பாக முகவர்களும்,பூத் டிஜிட்டல் ஏஜென்ட்கள்,இளைஞரணி, மகளிரணி தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் பாகநிலை உறுப்பினர்கள்,கழக நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளுடன் இணைந்து பணியினை மேற்கொண்டார்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கையை திருப்பூர் தெற்கு மாவட்டம், குடிமங்கலம் வடக்கு ஒன்றியம், சோமவாரபட்டி ஊராட்சி கண்டியம்மன் கோவில் விதியில் பாகம் எண் 192ல் மாவட்டச் செயலாளர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி முன்னிலையில் ஈடுபட்டனர். இதில் குடிமங்கலம் வடக்கு ஒன்றிய செயலாளர் ச.கிரி, உடுமலைப்பேட்டை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் அ.தமிழ்மறை, தலைமை;r செயற்குழு உறுப்பினர்கள் கே.எஸ். தனசேகர், சி.சியாம் பிரசாத், பொதுக்குழு உறுப்பினர் எம்.ஆர்.பாபு, ஒன்றிய அவைத்தலைவர் அற்புதராஜ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் நவீன் ராஜா, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் ரகுபதி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அனிதா செல்வராஜ், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் மணி உள்பட ஒன்றிய கழக நிர்வாகிகள், பூத் முகவர்கள் (BLA2), BDA, பலர் கலந்து கொண்டனர்.